**செய்தி வெளியீடு எண்:335** **நாள்: 21.06.2013**

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் 2012–ம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டமானது சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் கீழியங்கும் சமூகப் பாதுகாப்புத் துறை வாயிலாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தை அமுல்படுத்தும் துறையினர் சிறப்பாக நடைமுறைப்படுத்த தக்க ஆதரவை அளிக்கும் வகையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் பணியாற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கு (நிறுவனம் சார்ந்த மற்றும் நிறுவனம் சாராத) இச்சட்டம் குறித்த திறனை வளர்ப்பதே இப்பயிற்சி பட்டறையின் நோக்கமாகும்.

இப்பயிற்சியானது பாதுகாப்பு அலுவலருக்கு திறன் வளர்ப்பு பயிற்சியாக மட்டும் அமையாமல், பாலியல் வன்கொடுமை தொடர்பான சட்டங்களையும், அதில் கொடுக்கப்பட்ட அம்சங்களையும், பாதுகாப்பு அலவலர்களின் கடமைகளையும், பொறுப்புகளையும், இது தொடர்பான வழக்குகளை கையாளுவது குறித்த விவரங்களையும் மிகவும் சிறப்பாக எடுத்துரைக்கும் வகையில் அமைந்தது.

மேலும் அது மட்டுமல்லாது காவல் துறை, குழந்தை நலக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியோரின் பொறுப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியகை குறித்தும் விளக்கிக் கூறப்பட்டதால், கங்கேற்பாளர்கள் அவரவர் மாவட்டங்களுக்கு சென்ற பின்பு அங்குள்ள மாவட்ட அளவிலான பங்குதாரர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியளிக்க உதவும்,

ஆஷா நிவாசில் நடைபெற்ற இப்பயிற்சியினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.பா. வளர்மதி, அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாநில குழந்தைகள் உரிமைபாதுகாப்பு ஆணையத் தலைவர் திருமதி. சரஸ்வதி ரங்கசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் / செயலர் திரு.ந.மதிவாணன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு ஆற்றினார். இப்பயிற்சியானது தேசிய கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**